# மாங்காடு நகராட்சி

## நகர்மன்ற சாதாரணக் கூட்டம்

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 06 ம் தேதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மணிக்கு மாங்காடு ஓம் சக்தி நகர் புதிய அலுவலக நகர்மன்ற கூட்ட அரங்கில் நடைபெற உள்ள நகர்மன்ற சாதாரணக்கூட்ட பொருள் நடவடிக்கை விவரம்.

**குறள்**- அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை

**விளக்கம்**- தன்னை வெட்டுவோரையும் விழாமல் தாங்குகின்ற நிலம்போல், தம்மை
இகழ்வாரையும் பொறுப்பதே தலையான பண்பாகும்

----***-----

**பொருள் எண்.1**

நகராட்சி ஆணையரின் ஜனவரி **2026** மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.2**

நகராட்சியில் பல்வேறு இனங்களுக்கான ஜனவரி **2026** மாதத்திற்கான வரவு மற்றும் செலவுகள் மன்றத்தின் பதிவிற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– மன்றம் பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.3**

நகராட்சி அலுவலகத்திற்கு வரப்பெற்றுள்ள முக்கிய அரசு கடிதங்கள் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**– பதிவு செய்யலாம்.

**பொருள் எண்.4**

இந்நகராட்சியின் 2025-2026ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீடு மற்றும் 2026-2027ம் ஆண்டிற்கான வரவு – செலவு விவரப்பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் பார்வையிடலாம்.

**பொருள் எண்.5**

இந்நகராட்சியின் 2024-2025ம் ஆண்டிற்கான ஆண்டு கணக்குகள் 2024-2025ம் ஆண்டிற்கான கணக்குகள் தயார் செய்யப்பட்ட வகையில் RMS Account Consultant ராமாபுரம் அவர்களுக்கு ரூ.1,50,000/- (ரூபாய் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) தொகை வழங்கிட ஆகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.6

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டு வரை உள்ள பகுதிகளில் பொது சுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணிகளில் தினசரி தொற்று நோய் தடுப்பிற்காக அனைத்து வாரர்டுகளிலும் குப்பைகள் அகற்றப்பட்ட இடங்கள் கால்வாய்கள் அனைத்து பொது கழிப்பிடங்கள் சமுதாய கழிப்பிடங்கள் மேலும் சுற்றுபுறத்தை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டி தடுப்பு நடவடிக்கையாக கிருமி நாசினி நீத்த சுண்ணாம்பு பிளிச்சிங் பவுடர் மற்றும் கருப்பு பினாயில் தேவைப்படுகிறது அதன்படி. வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு.

| வ.எண் | பணிகளின் விவரம் | மதீப்பீடு தொகை ரூ,லட்சத்தில் | ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தபுள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | 1 முதல் 27 வார்டு வரை உள்ள பகுதிகளில் பொது சுகாதார பிரிவில் திட்டத்தின் கீழ் தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தினசரி தொற்றுநோய் தடுப்பிற்காக கிருமி நாசினி நீத்த சுண்ணாம்பு பிளிச்சிங் பவுடர் மற்றும் கருப்பு பினாயில் கொள்முதல் செய்ய. | ரூ.9.00லட்சம் | MMM Enterprises | மதிப்பீடு தொகையை விட 1.5% குறைவாக |
| | | | The Chennai Printing and Stationary Workers Industrial Co-operative Society Ltd | மதிப்பீடு தொகையைவிட 3.5.% அதிகம் |

ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டு குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணி உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்கொள்ள நகர் மன்றத்திற்கு பொருள் வைக்கபடுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.7

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 27 வார்டுகளில் பொது சுகாதாரப் பிரிவின் வாயிலாக JCB இயந்திரம் கொண்டு குப்பைகளை அகற்ற 2025 -2026 ஆண்டிற்கு MSR எர்த்மூவர்ஸ் நிறுவனத்திற்கு ஒப்பந்தபுள்ளி அடிப்படையில் பணிகள் மேற்கொள்ள பணி ஆணை வழங்கப்பட்டு பணிகள் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த காலம் மார்ச் 2026 உடன் முடிவடைவதால் 2026 -2027 ஆம் ஆண்டிற்கு புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்படும் வரை MSR எர்த் மூவர்ஸ் நிறுவனத்திற்கு ஏப்ரல் 2026 முதல் ஜீன் 2026 வரை கால நீட்டிப்பு செய்திட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.8</u>**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் **2024–25** மற்றும் 2025-26 Tourisum Grant 6th SFC திட்டம் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த **23.02.2026** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | Providing 32 Nos of 8.0m height double arm with 120W LED Street light at center Median Arrangements in Mangadu Municipallity | **30.00** | திருவாளர். லஷ்மி எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.03% **குறைவு** |
| | | | திருவாளர்.ராதிகா எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.05% **அதிகம்** |

**அலுவலக குறிப்பு:-**

**1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணியின் அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**<u>பொருள் எண்.9</u>**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திட்டம் **2025–26** பொது நிதியின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த **17.02.2026** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | அடிசன் நகர் புதிய குடீநீர் மேல்நிலை நீர்தேக்கத் தொட்டிக்கு தேவையான ஆழ்தளை கிணறுகள், குடிநீர் விநியோக பகிர்மான குழாய்கள் மற்றும் பிரதான குழாய்கள் அமைத்தல் | 17.00 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 0.14% **குறைவு** |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்க்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.65% **அதிகம்** |
| | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் பயன்பாட்டிற்காக உள்ள | | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 0.10% **குறைவு** |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | ஆழ்துளை கிணறுகள் தேவையான மின் மோட்டார்கள் ஒயர்கள் மற்றும் போர்டுகள் கொள்முதல் செய்தல் | 7.50 | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்க்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.89% **அதிகம்** |
| 3 | வார்டு எண்.1 முதல் 4 வரை உள்ள பகுதிகளில் ஆழ்துளை கிணறு அமைத்தல் பணி | 7.90 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 0.06% **குறைவு** |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்க்ஷன் | மதிப்பீடு தொகையை விட 8.58% **அதிகம்** |
| 4 | ஜனனி நகர் பகுதியில் ஆழ்துளை கிணற்றை சுத்தம் செய்து மினி போர்வெல் பொருத்துதல் | 1.50 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 0.36% **குறைவு** |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்க்ஷன் | மதிப்பீடு தொகையை விட 4.38% **அதிகம்** |
| 5 | கிருஸ்தவ சுடுகாடு பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.00 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 0.30% **குறைவு** |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்க்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.20% **அதிகம்** |
| 6 | வார்டு எண்.24,26,27 ஆகிய பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 4.90 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 0.24% **குறைவு** |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்க்ஷன் | மதிப்பீடு தொகையை விட 1.15% **அதிகம்** |
| 7 | மாங்காடு நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் விடுபட்ட இடங்களில் குடிநீர் குழாய் விஸ்தரிப்பு பணி செய்தல் | 9.00 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 1.40% **குறைவு** |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்க்ஷன் | மதிப்பீடு தொகையை விட 6.27% **அதிகம்** |
| 8 | பத்மாவதி நகர் பகுதியில் ஆழ்துளை கிணறு அமைத்தல் | 2.30 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 0.26% **குறைவு** |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்க்ஷன் | மதிப்பீடு தொகையை விட 2.76% **அதிகம்** |

அலுவலக குறிப்பு:-

**1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணியின் அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.10**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 2025–26 பொது நிதியின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த 10.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | பத்மாவதி நகர் மற்றும் வசந்தபுரம் பகுதியில் பெயர் பலகை அமைத்தல் | 1.90 | திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி | மதிப்பீடு தொகையை விட 0.29% **குறைவு** |
| | | | திருவாளர். எச்.கே.கன்ஸ்ட்க்ஷன் | மதிப்பீடு தொகையை விட 14.29% **அதிகம்** |
| 2 | வடக்கு ரகுநாதபுரம் 1 வது குறுக்கு தெரு வில் மழைநீர் கால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 15.90 | திருவாளர். தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.09% **குறைவு** |
| | | | திருவாளர் ஸ்ரீ வெங்கடேஸ்வரா பிராஜக்ட் . | மதிப்பீடு தொகையை விட 0.93% **அதிகம்** |

அலுவலக குறிப்பு:-

**1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணியின் அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.11**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம்** 2023–2024 மற்றும் 2025–2026 கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த 09.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | மாங்காடு நகராட்சியில் மாங்காடு குன்றத்தூர் பிரதான சாலையில் புல எண்.514ல் 0.50 ஏக்கர் நிலத்தில் புதிய பேருந்து நிலையம் அமைத்தல் பணி | 750.00 | திருவாளர். தில்லைநடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் | மதிப்பீடு தொகையை விட 0.02% **குறைவு** |
| | | | திரு.எம். என்.பாலசுந்தரம் | மதிப்பீடு தொகையை விட 0.73% **அதிகம்** |

அலுவலக குறிப்பு:-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு திட்ட பணியின் அவசியம் கருதி பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.12</u>

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் 2025–2026 பொது நிதியின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த 16.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | **அசோக் அவென்யூ பூங்காவில் மண் நிரப்பி உயர்த்துதல்** | 6.00 | திருவாளர். எஸ்.விஎன். இன்ஃபரா | மதிப்பீடு தொகையை விட 0.14% **குறைவு** |
| | | | திருவாளர்,அமிமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.71 % **அதிகம்** |
| 2 | **ஹரி அவென்யூ பூங்கா பகுதியில் மண் நிரப்பி உயர்த்துதல்** | 5.00 | திரு.தீனரங்கள் | மதிப்பீடு தொகையை விட 0.14% **குறைவு** |
| | | | திருவாளர்,அமிமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.71 % **அதிகம்** |
| 3 | **செல்வகணபதி நகர் பூங்காவில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்** | 16.50 | திருவாளர் ஏ.வி என். இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.05% **குறைவு** |
| | | | திரு.கே.ஆர். வடிவேல் | மதிப்பீடு தொகையை விட 2.09% **அதிகம்** |
| 4 | **அடிசன் நகர் பூங்கா பகுதியில் சுற்றுசுவர் மற்றும் பூங்கா அலங்கார வளைவு அமைத்தல்** | 16.50 | திரு.சற்குணன் | மதிப்பீடு தொகையை விட 0.08% **குறைவு** |
| | | | திருவாளர்,அமிமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.62% **அதிகம்** |
| 5 | **அருணாச்சலம் நகர் பூங்கா பகுதியில் (MINI MAST) சிறிய மின் கோபுர விளக்குகள் அமைத்தல்** | 6.00 | திருவாளர்ஏ.வி என். இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.10%**குறைவு** |
| | | | திரு.கே.ஆர். வடிவேல் | மதிப்பீடு தொகையை விட 1.70% **அதிகம்** |
| 6 | **அப்பாவு நகர் பூங்காவில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல்** | 17.20 | திருவாளர். கே.ஜி.ஆர் குருப்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.01% **குறைவு** |
| | | | திருவாளர் ஆரோக்கியநாதன் கன்ஸ்டிரக்சன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 5.00% **அதிகம்** |
| 7 | **அடிசன் நகர் பூங்காவில் MINI MAST) சிறிய மின் கோபுர விளக்குகள் அமைத்தல்** | 6.00 | திருவாளர் ஏ.வி என். இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.10%**குறைவு** |
| | | | திரு.கே.ஆர். வடிவேல் | மதிப்பீடு தொகையை விட 1.70% **அதிகம்** |

அலுவலக குறிப்பு:-

**1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

**2)** மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு திட்ட பணியின் அவசியம் கருதி **நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று** பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.13

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் **2025–26**ம் ஆண்டு பொது நிதியின் கீழ், கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள கடந்த **19.02.2026** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு கீழ்கண்டவாறு ஒப்புநோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விவரம் | மதிப்பீடு தொகை ரூ. லட்சத்தில் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் விவரம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | சார்லஸ் நகர் பகுதியில் அமைந்துள்ள சிறுபாலத்தில் கைப்பிடி சுவர் அமைத்தல் | 2.50 | திருமதி.ஆர் அமுதா | மதிப்பீடு தொகையை விட 0.06% **குறைவு** |
| | | | திருவாளர் எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 11.19% **அதிகம்** |
| 2 | காளிகாம்பாள் நகர் பகுதியில் மழைநீர் கால்வாய மேல்மூடி அமைத்தல் | 8.90 | திருவாளர் எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.25% **குறைவு** |
| | | | **திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி** | மதிப்பீடு தொகையை விட 4.68% **அதிகம்** |
| 3 | மீனாட்சி நகர் மெயின்ரோடு மழைநீர் கால்வாய் அமைத்தல் | 9.50 | திருவாளர்.கே.ஜி ஆர் குருப்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.01% **குறைவு** |
| | | | திருவாளர்.ஆரோக்கியநாதன் கன்ஸ்டிரக்சன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 5.17% **அதிகம்** |
| 4 | சாந்தி நகர் குறுக்கு தெருவில் சிமெண்ட் தளம் அமைத்தல் | 4.70 | **திருவாள் எஸ்.வி.என் இன்ஃப்ரா** | மதிப்பீடு தொகையை விட 0.05% **குறைவு** |
| | | | திருவாளர்.அமிமு எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.39% **அதிகம்** |
| 5 | அண்ணா தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 19.30 | **திரு.டி.தீனரங்கன்** | மதிப்பீடு தொகையை விட 0.02% **குறைவு** |
| | | | திருவாளர்.அமிமு எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.32% **அதிகம்** |
| 6 | பாலாண்டீஸ்வரர் கோயில் தெரு மழைநீர் கால்வாய் சீரமைத்தல் | 20.00 | திருவாளர் எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 0.17% **குறைவு** |
| | | | **திருவாளர். கென்ஸ் டெக்னாலஜி எல் எல்பி** | மதிப்பீடு தொகையை விட 3.63% **அதிகம்** |
| 7 | மாங்காடு நகராட்சியில் 2026 சட்டமன்ற தேர்தல் நடத்தவதற்கு அனைத்து வாக்குச்சாவடிகளுக்கும் தேவையான அடிப்படை வசிதகள் மேற்கொள்ளும் பணி | 9.90 | திருவாளர்.ஏவிஎன்.இன்ஃபரா டெக் | மதிப்பீடு தொகையை விட 0.10% **குறைவு** |
| | | | திரு. கே.ஆர்.வடிவேல் | மதிப்பீடு தொகையை விட 3.70% **அதிகம்** |
| 8 | இராமகிருஷ்ணாபுரம் பகுதியில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 6.50 | கே.அருண் குமார் | மதிப்பீடு தொகையை விட 0.04% **குறைவு** |
| | | | திருவாளர்.அமிமு எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.28% **அதிகம்** |

| | | | | |
|---|---|---|---|---|
| 9 | சாந்தி நகர் பகுதியில் மழைநீர் வடிகால் மேல்மூடி அமைத்தல் | 7.50 | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்டிரக்சன்ஸ் பிரைவேட் லிமிடேட் | மதிப்பீடு தொகையை விட 0.16% **குறைவு** |
| | | | திருவாளர் நிவேதா இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 2.03% **அதிகம்** |
| 10 | சுல்தான் பேட்டை மழைநீர் வடிகால் மேல்மூடி அமைத்தல் பணி | 5.00 | திருவாளர் எஸ்.வி.என்.இன்ஃபரா | மதிப்பீடு தொகையை விட 0.11% **குறைவு** |
| | | | திருவாளர் அமீமு எண்டர்பிரரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.24% **அதிகம்** |
| | | | திருவாளர் நிவேதா இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.30% **அதிகம்** |
| | | | திருவாளர் தில்லை நடராஜா ரோடு கன்ஸ்டிரக்ஷன்ஸ் பி.லிட்., | மதிப்பீடு தொகையை விட 1.20% **அதிகம்** |
| 11 | பட்டூர் மயான பகுதியில் பராமத்து பணிகள் மேற்கொள்ளுதல் | 5.60 | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடேட் | மதிப்பீடு தொகையை விட 0.10% **குறைவு** |
| | | | திருவாளர் நிவேதா இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.10% **அதிகம்** |
| 12 | சார்லஸ் நகர் பகுதியில் தார் சாலை அமைத்தல் | 5.00 | திரு.நாகலிங்கம் | மதிப்பீடு தொகையை விட 0.02% **குறைவு** |
| | | | திருவாளர். அமிமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.65% **அதிகம்** |
| 13 | வார்டு எண்.8ல் பல்நோக்கு உபயோகதிற்கு கட்டிடம் கட்டுதல் | 11.20 | திருவாளர் நிவேதா இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.11% **குறைவு** |
| | | | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடேட் | மதிப்பீடு தொகையை விட 0.39% **அதிகம்** |
| 14 | வன்னியர் பட்டூர் பள்ளியில் பேவர் பிளாக் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ளுதல் | 8.10 | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடேட் | மதிப்பீடு தொகையை விட 0.11% **குறைவு** |
| | | | திருவாளர் நிவேதா இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 2.23% **அதிகம்** |
| 15 | ராமகிருஷ்ணாபுரம் பகுதியில் மழைநீர் கால்வாய் மேல்மூடி அமைத்தல் | 7.50 | திருவாளர். கேஜி ஆர் குருப்ஸ் | மதிப்பீடு தொகையை விட 0.01% **குறைவு** |
| | | | திருவாளர்.ஆரோக்கியநாதன் கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | மதிப்பீடு தொகையை விட 5.14% **அதிகம்** |
| 16 | மாரியம்மன் கோயில் தெருவில் மழைநீர்கால்வாய் அமைத்தல் | 16.20 | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடேட் | மதிப்பீடு தொகையை விட 0.22% **குறைவு** |
| | | | திருவாளர் நிவேதா இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 3.66% **அதிகம்** |
| 17 | ராமகிருஷ்ணாபுரம் MCC குப்பை கிடங்கு பகுதியில் மேம்பாட்டு பணி செய்தல் | 8.75 | திருமதி. ஆர் அமுதா | மதிப்பீடு தொகையை விட 0.02% **குறைவு** |
| | | | திரு.எச்.கே. கன்ஸ்ட்ரக்ஷன் | மதிப்பீடு தொகையை விட 5.39% **அதிகம்** |
| 18 | மழைக்கலங்களில் மழைநீரை வெளியேற்ற ஓம்சக்தி நகர் 1 வது மெயின்ரோட்டில் கீழ்நிலை தொட்டி (SUMP) அமைத்தல் | 3.20 | திரு.வாசுதேவன் | மதிப்பீடு தொகையை விட 0.05% **குறைவு** |
| | | | திருவாளர் அமிமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 1.06% **அதிகம்** |
| 19 | மழைக்காலங்களில் மழைநீரை வெளியேற்ற அடிசன் நகர் மெயின் தெருவில் கீழ்நிலை தொட்டி (SUMP) அமைத்தல் | 3.20 | திரு.வாசுதேவன் | மதிப்பீடு தொகையை விட 0.05% **குறைவு** |
| | | | திருவாளர் அமிமு எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.91% **அதிகம்** |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 | சீனிவாசா நகர் (ஸ்டெப்ஸ்டோன் பார்ம்ஸ்) மெயின்தெரு மற்றும் 1,2,3,4,5 குறுக்கு தெருவிற்கு கப்பி சாலை அமைத்தல் | 6.50 | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடேட் | Single |
| 21 | வார்டு எண்.15ல் காரியமேடை அமைத்தல் | 9.60 | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடேட் | மதிப்பீடு தொகையை விட 0.11 % **குறைவு** |
| | | | திருவாளர் நிவேதா இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 7.83% **அதிகம்** |
| 22 | சாந்தி நகர் பகதியில் காரியமேடை அமைத்தல் | 8.20 | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடேட் | மதிப்பீடு தொகையை விட 0.08% **குறைவு** |
| | | | திருவாளர் நிவேதா இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 20.90% **அதிகம்** |
| 23 | லீலாவதி நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 16.40 | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடேட் | மதிப்பீடு தொகையை விட 0.10 % **குறைவு** |
| | | | திருமதி. நிவேதா | மதிப்பீடு தொகையை விட 2.19% **அதிகம்** |
| 24 | அண்ணா தெரு பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 7.10 | திருவாளர் நிவேதா இன்ஜினியரிங் எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.11% **குறைவு** |
| | | | தில்லை நடராஜா ரோடு கன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடேட் | மதிப்பீடு தொகையை விட 0.39% **அதிகம்** |
| 25 | மீரா நகர் பகுதியில் மழைநீர் கால்வாய் அமைத்தல் | 6.15 | திரு.ஆர்.ராமன் | மதிப்பீடு தொகையை விட 0.21% **குறைவு** |
| | | | திருவாளர்.அமிமு எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.57% **அதிகம்** |
| 26 | மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டுகளில் 70W மற்றும் 90W புதிய LED மின் விளக்குகள் கொள்முதல் செய்தல் | 20.00 | திருவாளர்.லஷ்மி எண்டர்பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 4.46% **குறைவு** |
| | | | திருவாளர்.ராதிகா எண்டர் பிரைசஸ் | மதிப்பீடு தொகையை விட 0.53% **அதிகம்** |

அலுவலக குறிப்பு:-

**1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) மேற்படி பணிகளுக்கு குறைந்த ஒப்பந்தப்புள்ளி விலைவிகிதம் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு பணியின் அவசியம் கருதி நகர் மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.14</u>

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் 2026 நடைபெறுவதை முன்னிட்டு மாங்காடு நககராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ள சுவரொட்டிகள், பேனர்கள் மற்றும் விளம்பர பதாகைகள்,கொடிக்கம்பங்கள்,காடாதுணிகள் மற்றும் கட்சி தோரணங்கள் ஆகியவற்றை அகற்ற விலைப்புள்ளி கோரவும் தோராய செலவினம் ரூ.7.00லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு-** மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.15

மாங்காடு நகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு (census) நகராட்சி உள்ளாட்சி அமைப்புகளில் முன்மாதிரி கணக்கெடுப்பு பணி மேற்கொள்ளவது மற்றும் நகராட்சி மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை அரசாணை(நி) எண்.324 நாள் .17.10.2025ன் படி நகராட்சி பகுதியில் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் அடிப்படை சேவைகள் மேம்படுத்திட பொதுமக்கள் கலந்து கொள்ள சிறப்பு கூட்டம் நடைபெறுவது குறித்து கடந்த 01.11.2025 மற்றும் 25.10.2025 அன்று தினத்தந்தி நாளிதழில் பிரசுரப்படுத்தியதற்குண்டான பட்டியல் தொகை (ரூ.11340+11340/=22680/-) (The Daily Thanthi) என்ற நிறுவனத்திடமிருந்து வரப்பெற்றுள்ளது. மேற்கண்ட தொகையினை பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மேற்கண்ட செலவினம் ரூ.22680/- பொதுநிதியில் வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.16

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பூங்கா, திறந்தவெளியிடம் (OSR) மொத்தம் 24 எண்ணிக்கை உள்ளது. கீழ்க்கண்ட விவரப்படியான பூங்கா மற்றும் திறந்தவெளியிடம் (OSR) இடம் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் சுற்று வேலி அமைக்கவும் மற்றும் பெயர் பலகை அமைக்கவும் ஒப்பந்தப்புள் கோரவும் அதற்கான தோராய செலவினம் ரூ.9.50 லட்சம் சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பூங்கா விவரம் | பரப்பளவு ச.மீ |
|---|---|---|
| 1 | திருவள்ளுவர் சிட்டி | 876 |
| 2 | திருவள்ளுவர் சிட்டி பேஸ்-1 | 2380 |
| 3 | சக்தி நகர் | 11490 |
| 4 | சி.டி.ஏ. கார்டன் | 2112 |
| 5 | ஜீவா நகர் மெயின்ரோடு | 2069 |

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.17

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட பகுதியில் பூங்கா, திறந்தவெளியிடம் (OSR) மொத்தம் 24 எண்ணிக்கை உள்ளது. கீழ்க்கண்ட விவரப்படியான பூங்கா மற்றும் திறந்தவெளியிடம் (OSR) இடம் ஆகியவற்றை பாதுகாக்கும் வகையில் சுற்று வேலி அமைக்கவும் மற்றும் பெயர் பலகை அமைக்கவும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான தோராய செலவினம் ரூ.9.50 லட்சம் சென்னை பெருநகர வளர்ச்சி குழும நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

| வ.எண் | பூங்கா விவரம் | பரப்பளவு ச.மீ |
|---|---|---|
| 1 | ஏ.ஆர்.நகர் | 2604 |
| 2 | அடிசன் நகர் | 904 |
| 3 | மாருதி | 343 |
| 4 | மாருதி என்கிளேவ் வசந்தபுரம் | 2609 |
| 5 | ஸ்ரீசக்ரா நகர் | 908 |

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.18

மாங்காடு நகராட்சியில் சென்னை உயர்நீதி மன்றம் மற்றும் துணை நீதி மன்றங்களில் வரப்பெறும் வழக்குகளுக்கு நகராட்சி சார்பாக வழக்கை எடுத்து நடத்தும் வழக்கறிஞர்களுக்கு தொகையினை வழங்கவும் மற்றும் எதிர்வாதத்தினை தயார் செய்யவும் தோராய செலவினமாக ரூ.200000/- பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.19

மாங்காடு நகராட்சியில் குடியிருப்பு மற்றும் வணிகபயன்பாட்டிற்கு கட்டிட அனுமதி, மனைவரன்முறை அனுமதி மனைப்பிரிவு மற்றும் மனைஉட்பிரிவு அனுமதி பெறுவதற்கு ஏற்கனவே நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நாளிலிருந்து வசூலிக்கப்பட்டது, தற்போது மாங்காடு நகராட்சி முதல்நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து கீழ்க்கண்ட கட்டணங்கள் வசூல் செய்யப்படுகிறது மன்றத்தின் பார்வைக்கு

**குடியிருப்பு கட்டிட உரிமைத்தொகை**

**அரசாணை எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.1) துறை நாள்.18.07.2024**

கட்டிட உரிமை கட்டண விவரம் :

1) உட்கட்டமைப்பு கட்டணம் - ரூ. 375/- ஒரு சதுர மீட்டருக்கு
2) கட்டிட உரிம கட்டணம் - ரூ. 138/- ஒரு சதுர மீட்டருக்கு
3) வளர்ச்சி கட்டணம்(D.C) - ரூ. 16/- ஒரு சதுர மீட்டருக்கு (கட்டிட மற்றும் உத்தேச இடம்)
4) கட்டிட தொழிலாளர் நல சந்தா கட்டணம்)(LWF) - ரூ. 221/- ஒரு சதுர மீட்டருக்கு
5) கட்டிட பணிகள் துவங்கப்பட்டிருப்பின் அபராத கட்டணம் - கட்டிட உரிமை கட்டணத்தில் 50 %
6) பழைய கட்டிடம் இடித்து அப்புறப்படுத்த இடிமான கட்டணம் - ஒரு சதுர மீட்டருக்கு ரூ.50/-
7) மழைநீர் சேகரிப்பு தொட்டி முன் வைப்பு தொகை - ஒரு குடியிருப்புக்கு ரூ. 1000/-
8) முறைப்படுத்துதல் கட்டணம்(R.C) - சதுர மீட்டருக்கு ரூ.50/-
9) Security Deposit - 50% of I&A Charges
10) அறிவிப்பு பலகை - ரூ.1500/.

**வணிக கட்டிட உரிமைத்தொகை**

**அரசாணை எண்.94 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(ந.நி.1) துறை நாள்.18.07.2024**

<u>கட்டிட உரிமை கட்டண விவரம்</u> :

1) உட்கட்டமைப்பு கட்டணம் - ரூ. 375/- ஒரு சதுர மீட்டருக்கு
2) கட்டிட உரிம கட்டணம் - ரூ. 348/- ஒரு சதுர மீட்டருக்கு
3) வளர்ச்சி கட்டணம்(D.C) - ரூ. 32/- ஒரு சதுர மீட்டருக்கு (கட்டிட மற்றும் உத்தேச இடம்)
4) கட்டிட தொழிலாளர் நல சந்தா
5) கட்டணம்)(LWF) - ரூ. 183/- ஒரு சதுர மீட்டருக்கு
6) கட்டிட பணிகள் துவங்கப்பட்டிருப்பின் அபராத கட்டணம் - கட்டிட உரிமை கட்டணத்தில் 50 %
7) பழைய கட்டிடம் இடித்து - ஒரு சதுர மீட்டருக்கு ரூ.50/-
8) அப்புறப்படுத்த இடிமான கட்டணம் மழைநீர் சேகரிப்பு தொட்டி முன் வைப்பு தொகை - ஒரு குடியிருப்புக்கு ரூ. 1000.-
9) முறைப்படுத்துதல் கட்டணம்(R.C) - சதுர மீட்டருக்கு ரூ.50/-
10) Security Deposit - 50% of I&A Charges
11) அறிவிப்பு பலகை - ரூ.1500/.

**<u>மனைவரன் முறை அனுமதி கட்டணம்</u>**

அரசாணை எண். 78, 172 -ன் படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே கீழ்வரும் கட்டணங்கள் மனுதாரரிடம் செலுத்த கோரலாம்.

1. அபிவிருத்தி கட்டணம் - ஒரு . ச.மீ ரூ.250 வீதம்
2. வரன்முறைக்கட்டணம் - ஒரு . ச.மீ ரூ.105 வீதம்

**<u>மனை உட்பிரிவு கட்டணம்</u>** :

| | |
|---|---|
| மனை உட்பிரிவு கட்டணம் | ஒரு மனைக்கு ரூ.5000./- |
| மனை ஒப்புதல் கட்டணம் | ரூ.1000./- |
| கூடுதல் வரைபடம் | ரூ.1000./- |
| சென்னை பெருநகர வளர்ச்சி குழும கட்டணம் | |
| அ)அபிவிருத்தி கட்டணம் | ஒரு சதுரமீட்டருக்கு 4.00 |
| ஆ)முறைப்டுத்துதல் கட்டணம் | ஒரு சதுரமீட்டருக்கு 50.00 |

இதர கட்டணம்

1) Scrutiny Fees ஒரு ச.மீ X 1.50

2) Sub Div Fees ஒரு மனைக்கு X 300

**மனைப் பிரிவு கட்டணம்** :

| | | | |
|---|---|---|---|
| 1 | விண்ணப்ப ஆய்வு கட்டணம் | : | ரூ.5000/- |
| 2 | மனைப்பிரிவுஅனுமதி கட்டணம் | : | ஒருமனைக்கு ரூ.1000/- |
| 3 | மனைப்பிரிவு கட்டணம் | : | ஒரு செண்ட்டுக்கு ரூ.1000/- |
| 4 | சென்டேஜ் கட்டணம் | : | ஒரு செண்ட்டுக்கு ரூ.600/- |
| 7 | அங்கீகாரகட்டணம் | : | ஒரு செண்ட்டுக்கு ரூ.600/- |
| 8 | கூடுதல் வரைப்பட கட்டணம் | : | ஒரு மனைக்கு ரூ.1000/- |
| 9 | பராமரிப்பு கட்டணம் | : | ஒரு ஏக்கருக்கு ரூ-1,00,000/- |

அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.20**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.21 சபரி நகரில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள உடற்பயிற்சி கூடத்திற்கு புதியதாக மின் இணைப்பு பெற இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்கவும் அதற்கான செலவினம் பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.21**

மாங்காடு நகராட்சிக்குட்பட்ட 27 வார்டுகளில் உள்ள தெரு விளக்குகளின் பராமரிப்புக்கு தேவையான மின் உதிரி பாகங்களான LED Drive 50W LED Metal core Pcb ஆகியவை கொள்முதல் செய்யவும், தோராய செலவினம் ரூ.1,00,000/- நகராட்சி பொது நிதியில் வழங்கவும் மன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.22**

மாங்காடு நகராட்சியில் எதிர்வரும் சட்டமன்ற தேர்தல் 2026ஐ முன்னிட்டு தேர்தல் நடைபெறும் 40 எண்ணிக்கையிலான வாக்குசாவடி மையங்களில் மேற்கொள்ளபடவேண்டிய அடிப்படை வசதிகளான சாமியானபந்தல், மின்வசதி, மின்விளக்கு, சாய்தளம், குடிநீர் வசதி நாற்காலிகள், இருக்கை மேஜைகள் மற்றும் இதர அடிப்படை வசதிகள் மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி கோரவும் அதற்குண்டான தோராய செலவினம் ரூ.9.90 லட்சத்தினை 2025-26 மற்றும் 2026-2027 பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்திற்க்கு பொருள் வைக்கப்படுகிறது.

பொருள் எண்.23

மாங்காடு நகராட்சியில் பாதாள சாக்கடை திட்டம் நிதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி தொடர்பாக சுப்பையா நிறுவனம் கடந்த 05.02.2026 சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளது (வழக்கு எண்.W.P.No. 4625 of 2026) மேற்கண்ட வழக்கில் இடைக்கால தடை விதிக்கப்பட்டது எனவே இடைக்கால தடையினை நீக்கம் செய்ய 11.02.2026 மற்றும் 12.02.2026 ஆகிய இரண்டு நாட்கள் நகராட்சி சார்பாக வாதாடுவதற்கு அரசு வழக்கறிஞர் சென்னை உயர்நீதி மன்றம் அவர்களிடமிருந்து கட்டணம் செலுத்த கோரி ரூ.1,16,000/- பட்டியல் வரப்பெற்றுள்ளது. எனவே மேற்படி பட்டியல் தொகை அரசு வழக்கறிஞர் அவர்களுக்கு 2025- 26 பொது நிதியின் கீழ் வழங்க மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலலக குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி அரசு வழக்கறிஞர் கட்டணம் ரூ.116000/- 2025-26 பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.24

இந்நகராட்சியில் ஆணையாளர் அவர்களுக்கு பயன்டுத்தப்பட்டு வருகின்ற ஈப்பு வாகனம் (வாகனம் எண். **TN 85 U 9200** ) மேற்படி வாகனம் 50000 கி. மீ கடந்து விட்டதாலும் அங்கிகரிக்கப்பட்ட பணி மனையில் வாகன பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிக்கான 4வது General service மேற்கொள்ள **“M/s.Marudhar Mishri Motor's LLP”**D.No.235 Mount Road Poonamallee high Road, Iyyappanthangal, Chennai-56ல் விடப்பட்டதை தொடர்ந்து தற்போது பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணி முடிக்கப்பட்டு மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் தொகை ரூ.19,271/- வரப்பெற்றுள்ளது. மேற்படி நிறுவனத்திற்கு பட்டியல் தொகை ரூ.19,271/- ஐ பொது நிதியிலிருந்து வழங்கி பணி மேற்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு-

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) மேற்படி பணியின் அவசியம் கருதி நகர்மன்றத்தின் ஒப்புதலை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகை ரூ.19,271/- ஐ பொது நிதியிலிருந்து“M/s.Marudhar Mishri Motor's LLP” நிறுவனத்திற்கு வழங்கி நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

பொருள் எண்.25

மாங்காடு நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களின் அலுவலக பயன்பபாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு வரம் ஈப்பு வாகனம் (No. TN85T2345) வாகனத்தின் நான்கு டயர்களையும் புதியதாக பொறுத்தி மாற்றியமைக்க உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் கீழ் கண்டுள்ளவறு விலைப்புள்ளிகிள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பணியின் விவரம் | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் விவரம் | விலைப்புள்ளி தொகை ரூ |
|---|---|---|---|
